RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22345

# அகநானூற்றில் பழந்தமிழரின் மரபார்ந்த நம்பிக்கைகள்

**பா.ம. ஜெயகலா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்-2, தமிழ்நாடு, இந்தியா

# Traditional Beliefs of Palanthamizhar in Akananuru

**P.M. Jayakala** [a, *]

[a] Department of Tamil, S.T. Hindu College, Nagercoil-2, Tamil Nadu, India

* Corresponding Author: jayakals@gmail.com

Received: 18-04-2022
Revised: 28-06-2022
Accepted: 12-07-2022
Published: 30-07-2022

Check for updates

**ABSTRACT**

One of the octet texts is called Agananuru Nedundogai. This is an introspective book containing four hundred hymns. Kurinji, Mullai, Marutham, Neithal and Balai are divided numerically, which is better than other books. We have been touching and wearing many types of accessories. Our ancestors used to wear tiger teeth around their necks as amulets. They have worshiped the crescent on the basis of nature worship. They believe that if they worship the crescent moon, their activities will also grow as the crescent moon grows. In the rituals of our forefathers, the ritual of the madam is very essential. It is worship to Lord Muruga. The place where this frenzy is performed is called the frenzy field. The deity is dancing on the priest, who is worshiping the deities. This is called frenzy, frenzy or velanatal. This worship is performed when the bodies of women in love are falling. At night, they called Velan and set up a frenzy. In our society, there is a practice of sacrificing other living beings to appease the gods and save human life. We offer sacrifices to the deities and animals like goats, pigs and chickens. People believe that the deity will accept the sacrifice and save us. The Palandamis have worshiped the Lord by cultivating candles in their lives.

**Keywords:** Akananuru, Nampikkai, Pulippal Tali, Piraitolutal, Veriyattu, Paliyitutal, Velviti

## முன்னுரை

மக்களால் உருவாக்கப்படும் நம்பிக்கைகள் சமூகத்தின் பண்பாட்டு மரபினை அறிவிக்க வல்லன. இந்நம்பிக்கைகள் காலங்காலமாக ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொரு தலைமுறையினருக்கு பரவி வருகின்றன. இவை மக்களை இயக்குகின்றன. நம்பிக்கைகள் பெரும்பாலும் மனிதனின் அச்ச உணர்வினை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவை. எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான அகநானூற்றில் பழந்தமிழரின் வாழ்வியல் செய்திகளை காண முடிகின்றது. நீண்டப் பாடல்களைக் கொண்ட அகநானூற்றில் இடம்பெற்ற பழந்தமிழரின் மரபார்ந்த நம்பிக்கைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அகநானூறு

சங்க இலக்கியமான எட்டுத் தொகையில் ஒன்று அகநானூறு. இந்நூல் நானூறு பாடல்களைக் கொண்டது. 13 அடி சிற்றெல்லையும் 31 அடி பேரெல்லையும் கொண்ட நீண்ட பாடல்களைக் கொண்டிருப்பதால் இதனை"நெடுந்தொகை" என்று கூறுவர். ஆசிரியப்பாவால் ஆக்கப்பட்டதால் இதனை 'நெடுந்தொகை அகவல்' என்பர். இந்நூல் களிற்றியானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக் கோவை

என்னும் மூன்று பிரிவுகளை உடையது. இந்நூலில் எண் அடிப்படையில் திணையினைப் பகுத்திருப்பது மற்ற நூல்களுக்கு இல்லாத சிறப்பாகும்.

## புலிப்பல் தாலி

அணியப்படுவது அணிகலன். அணிகலன் அணிவது தொன்று தொட்டு நடைமுறையிலிருந்து வரும் வழக்கமாகும். நம் முன்னோர்கள் தொடக்க காலத்தில் காப்பணி கலன்களையே அணிந்துள்ளனர். காலப்போக்கில் நாகரீகத்தின் வளர்ச்சியின் காரணமாக அழகு சாதனங்களாக அணிகலன்களை அணிந்து வருகின்றனர். புலிப்பல் தாலி என்பது புலியின் பல்லை கோர்த்து கழுத்தில் அணிவதாகும். இதனை சிறுவர்கள் பயம் அறியாமல் இருப்பதற்கும் அவர்களை தீய சக்திகள் நெருங்காமல் இருப்பதற்கும் பயன்படுத்தியுள்ளனர். இதனை அகநானூற்று பாடல்கள் பொன்னுடைத்தாலி, பொன்னொடு புலிப்பற்கோத்த புலம்பு மணித்தாலி எனச் சுட்டுகின்றது. சிறுவன் புலிப்பல் தாலியை அணிந்துள்ளமையை,

"புலிப்பற் தாலிப் புதல்வற்புல்லி

அன்னா! என்னும் அன்னையும் அன்னோ" (Nagarajan, 2014)

இப்பாடலடிகள் வழி அறிய முடிகின்றது.

தலைவி பொன்னால் செய்த புலிப்பல்லோடு கோத்த தனி மணித் தாலியினை அணிந்தவள் என்பதனை,

"-------------பொன்னொடு

புலிப் பல் கோத்த புலம்பு மணித் தாலி" (Jayabal, 2016)

இவ்வடிகள் பகர்கின்றன. சிறுவர் புலிப்பல் தாலியினை அணிந்ததை,

"முகிழ் நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்

பொன்னுடைத் தாலி என் மகன் ஒற்றி

வருகுவை ஆயின் தருகுவென் பால்" (Jayabal, 2016)

என்ற இப்பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன. இதன் மூலம் சங்க கால மக்களிடம் புலிப்பல் அணியும் வழக்கம் இருந்ததை அறிய முடிகின்றது. மேலும் இதனை காப்பு நம்பிக்கையாகவும் கடைப்பிடித்துள்ளனர்.

## பிறை தொழுதல்

பிறை தொழுதல் என்பது இயற்கை வழிபாட்டின் அடிப்படையில் தோன்றியது. இது மூன்றாம் நாள் சந்திரனைத் தொழுதலாகும். பிறை வளர்வது போல தங்களின் செயல்பாடுகளும் வளர்ச்சியடையும் என்ற நம்பிக்கையில் முற்காலத்தில் பிறை தொழுதல் தோன்றியது. இன்றும் வளர்பிறையில் நல்ல காரியங்களைத் தொடங்கும் வழக்கம் உள்ளது. மதியானது பதினைந்து நாட்களில் முழு நிலவாக மாறிவிடுவதனை,

"மாகவிசும்பின் வெண்திங்கள்

மூ - ஐந்தான் முறைமுற்ற" (Balasubiramaniyan, 2014)

இப்புறநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கின்றது. பழந்தமிழர்கள் மாலை நேரத்தில் மதியினை வழிபட்டதை,

"புள்ளித் தொய்யிற் பொறிபடு சுணங்கின்

ஒள்இழை மகளிர் உயர்பிறை தொழூஉம்

புல்லென் மாலை ------------------- (Jayabal, 2016)

இவ்வடிகள் வழி அறிய முடிகின்றது. புள்ளி வடிவமாக எழுதின தொய்யிலையும், புள்ளிகள் பொருந்திய தேமலையும் உடைய ஒளி பொருந்திய ஆபரணங்களை அணிந்த கன்னிப் பெண்களும் பிறரும் மாலை பொழுதில் பிறையினைத் தொழுதுள்ளனர்.

## வெறியாட்டு

வெறியாட்டு என்பது மலைச்சார்ந்த நம் முன்னோர்களின் வழிபாட்டு முறையாகும். வெறியாட்டு நிகழும் இடத்தை "வெறியாட்டுக்களம்" என்பர். இறைவனுக்கு பூஜை செய்யும் பூசாரி மேல் இறைவன் புகுந்து ஆடுவது வெறி ஆடல் என்பர் பூசாரியின் வாயிலாக இறைவன் வெளிப்படுவான் என்ற அடிப்படையில் தோன்றிய வழிபாட்டு முறையினை வெறியயர்தல் என இலக்கியங்கள் சுட்டுகின்றன. இதனை வேலனாடல் என்றும் கூறுவர். இலக்கியங்களில் காதல் வயப்பட்ட பெண்களின் உடல்நலம் குன்றும் போது இவ்வழிபாட்டுச் சடங்கினை மேற்கொண்டுள்ளனர். இது இன்றைய நாட்டுப்புறங்களில் பேயோட்டுதலோடு தொடர்புடையது. வெறியாடும் களத்தை வெறிக்களம் என்பர். வெறியாடுதல் நள்ளிரவில் நடைபெறும். முருகனை வழிபட இரவில் வேலனை அழைத்து வெறியாடுகளம் அமைத்து முருகனின் வேலிற்கு மாலை சூட்டி பலிக் கொடுத்ததை,

"முதுவாய்ப் பெண்டிர் அது வாய் கூற,

களம் நன்கு இழைத்து, கண்ணி சூட்டி

வள நகர் சிலம்பப் பாடி, பலி கொடுத்து

உருவச் செந்தினை குருதியொடு தூஉய்

முருகு ஆற்றுப்படுத்த உரு கெழு நடு நாள்" (Jayabal, 2016)

என்ற இப்பாடல் வரிகள் சுட்டுகின்றன. பலிக் கொடுத்து அழகிய சிவந்த தினையினைக் குருதியுடன் கலந்து தூவி முருகனை வரும்படி அழைத்து இல்லத்துள் வழிபட்டுள்ளனர். வெறியாட்டினைத் தொல்காப்பியம்,

"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்

வெறியாட் டயர்ந்த காந்தளும்" (Thirugnanasampantham, 2018)

என்கின்றது. வெறியாட்டுக்களம் அழகு செய்யப்பட்ட அகன்ற பெரிய பந்தலிலே வேயப்பட்டிருந்ததனை,

"கூடு கொள் இன் இயம், கறங்க, களன் இழைத்து,

ஆடு அணி அயர்ந்த அகன் பெரும் பந்தர்" (Jayabal, 2016)

இவ்வரிகள் பறைச்சாற்றுகின்றன.

வெறியாட்டின் போது ஆட்டின் குட்டியினை அறுத்தல், தினையரிசியினைப் பலியாக தருதல், இசைக்கருவிகளை முழங்குதல் போன்ற வழிபாட்டு மரபுகள் நடைபெற்றதனை,

"மறிக் குரல் அறுத்து தினைப் பிரப்பு இரீஇ

செல் ஆற்றுக் கவலைப் பல்இயம் கறங்க" (Balasubiramaniyan, 2014)

இவ்வடிகள் வழி அறியலாம்.

## பலியிடுதல்

முன்னோர்கள் தெய்வங்களைச் சாந்தப்படுத்த பலியிடுதல் என்னும் வழக்கத்தை கையாண்டுள்ளனர். பழங்காலத்திலிருந்தே மனித உயிரினை காப்பாற்ற பிற உயிரைப் பலியிடும்

வழக்கம் இருந்துள்ளது. தற்போது நம் சமூகத்தில் மனித உயிரை காப்பாற்ற தெய்வங்களுக்கு நேர்ச்சைப் போட்டு ஆடு, பன்றி, கோழி என்பன போன்ற விலங்குகளைப் பலி கொடுக்கின்றனர். தெய்வம் பலியை ஏற்றுக்கொண்டு நம்மைக் காத்திடும் என மக்கள் நம்புகின்றனர். பலியிட்ட விலங்கின் குருதியை பாதிக்கப்பட்டவரின் நெற்றியில் இடுதல் மரபாகும். உழவுத் தொழில் செய்யும் தொழிலாளர்கள் பொங்கல் அன்று இறைவனுக்கு ஆட்டுக் கிடாவினைப் பலிக் கொடுத்து வழிபடுகின்றனர். இது நம் தொல்குடி சமூகத்தின் வழிபாட்டு முறையின் எச்சமாகும். தினை அரிசி சோற்றுடன் குருதியைக் கலந்து வேலனுக்குப் பலியிடுதலும், ஆட்டின் குட்டியைப் பலியிட்டு, அதன் குருதியைத் தலைவியின் நுதலில் நீவுதலும் ஆகிய வெறியாட்டு முறைகளைப் பழந் தமிழர்கள் வாழ்வில் கடைபிடித்து வந்ததை,

"முருகு அயர்ந்து வந்த முதுவாய் வேல
சினவல் ஓம்புமதி வினவுவது உடையேன்
பல்வேறு உருவின் சில்அவிழ் மடையொடு
சிறு மறி கொன்று, இவள் நறுநுதல் நீவி
வணங்கினை கொடுத்தி ஆயின்" (Nagarajan, 2014)

இப்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. தலைவியின் மெலிவிற்குரிய காரணத்தை அறிய தாய் நிவேதனப் பொருட்களைப் பலியாக பரப்பி வேலனை அழைத்து, வெறியாடும் களத்தினைப் பொலிவுறுமாறு செய்து ஆட்டுக்குட்டியைப் பலியாகக் கொடுக்க எண்ணுவதை,

“செந்தார்க் கிள்ளை நம்மொடு கடிந்தோன்
பண்புதர வந்தமை அறியாள் நுண்கேழ்
முறிபுரை எழில்நலத்து என்மகள் துயர் மருங்கு
அறிதல் வேண்டும் எனப் பல்பிரப்பு இரீஇ
அரியா வேலற் தரீஇ, அன்னை
வெறிஅயர் வியன்களம் பொலிய ஏத்தி
மறி உயிர் வழங்கா அளவை, சென்றுயாம்" (Jayabal, 2016)

மேலும்,

"கூறாய் செய்வது - தோழி வேறு உணர்ந்து
அன்னையும் பொருள் உகுத்து அலமரும் மென்முறிச்
சிறுகுளகு அருந்து, தாய்முலை பெறாஅ
மறிகொலைப் படுத்தல் வேண்டி, வெறிபுரி
எதில் வேலன் கோதை துயில்வரத்
தூங்கும் ஆயின், அதூஉம் நாணுவல்" (Jayabal, 2016)

இப்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

## வேள்விதீ

வேள்விதீ வளர்த்து நெய் ஊற்றி இறைவனை வழிபடும் நிலையினைப் பழந்தமிழர் தங்கள் வாழ்வில் கடைப்பிடித்து வந்துள்ளனர். இதன் மூலம் நாம் விரும்பியதை வாழ்வில் அடையலாம் என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளனர். சங்க இலக்கியமான பதிற்றுப்பத்து வேள்வி நடைப்பெற்றதனை,

"கேள்வி கேட்டுப் படிவம் ஒடியாது

வேள்வி வேட்டனை, உயர்ந்தோர் உவப்ப" (Aalish, 2014)

இவ்வடிகளின் மூலம் சுட்டுகின்றது. சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை தன் மனைவியோடு வேண்டி வேள்வி செய்து மகப்பேறு பெற்றதனை,

"ஒடுங்கு ஈர் ஓதி, ஒண்ணுதல் கருவில்

எண் இயல்முற்றி, ஈர் அறிவு புரிந்து

சால்பும் செம்மையும் உளப்படப் பிறவும்

காவற்கு அமைந்த அரசு துறை போகிய

வீறு சால் புதல்வற் பெற்றனை" (Aalish, 2014)

இவ்வடிகள் வழி அறிய முடிகின்றது. வேள்வியின் மூலம் விரும்பியதனைப் பெறலாம் என்பதனை,

"வள் வாய் அம்பின், கோடைப் பொருநன்

பண்ணி தைஇய பயம் கெழு வேள்வியின்

விழுமிது நிகழ்வது ஆயினும்" (Jayabal, 2016)

அகநானூற்றுப்பாடல் நமக்கு எடுத்துரைக்கிறது.

## முடிவுரை

நம்பிக்கைகள் நமது வாழ்வோடு இரண்டறக் கலந்துள்ளன. பழந்தமிழர்கள் மரபார்ந்த நம்பிக்கைகளை வாழ்வில் கடைப்பிடித்துள்ளதை இலக்கியங்கள் பறைச்சாற்றுகின்றன. சிறுவர்கள் காப்பு அணிகலனான புலிப்பல் தாலியினை அணிந்துள்ளனர். பிறைதொழும் வழக்கத்தினையும் கடைப்பிடித்துள்ளனர். வெறியாட்டுகளம் அமைத்து முருகனுக்கு ஆட்டுக்குட்டியினைப் பலிகொடுத்துள்ளனர். வேள்வித்தீ வளர்த்து இறைவனை வழிபட்டால் நாம் விரும்பியதை அடையலாம் என்ற நம்பிக்கையினையும் கொண்டுள்ளனர்.

## References

Aalish, A. (2014), Pathittuppaththu, New Century Book House Pvt Ltd, Chennai, India

Balasuppiramaniyan, Viswanathan A, Nagarajan V, Arokkiyasamy, Thilakavathi K, Sathiyanarayanan V, Purananuru, (2014), New Century Book House Pvt Ltd, Chennai, India

Jayabal, (2014), Agananuru, New Century Book House Pvt Ltd, Chennai, India

Nagarajan V, (2014), Kurunthokai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Thirgnanasampantham, S. (2018), Tholkappiya Porulathigaram, Kathir Pathippakam, Thiruvaiyaru, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License